ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கைம்மானம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கைம்மானம் ॥

## திருக்கண்ணபுரம் - 9

‡கைம் மான மத யானை⋆ இடர் தீர்த்த கரு முகிலை⋆
மைம் மான மணியை⋆ அணி கொள் மரகதத்தை⋆
எம்மானை எம்பிரானை ஈசனை⋆ என் மனத்துள்
அம்மானை⋆ அடியேன் அடைந்துய்ந்து போனேனே (1)

தரு மான மழை முகிலைப்⋆ பிரியாது தன்னடைந்தார்⋆
வரு மானம் தவிர்க்கும்⋆ மணியை அணியுருவில்⋆
திருமாலை அம்மானை⋆ அமுதத்தைக் கடற் கிடந்த
பெருமானை⋆ அடியேன் அடைந்துய்ந்து பிழைத்தேனே (2)

விடையேழ் அன்றடர்த்து⋆ வெகுண்டு விலங்கல் உறப்⋆
படையால் ஆழி தட்ட⋆ பரமன் பரஞ்சோதி⋆
மடையார் நீலம் மல்கும் வயல் சூழ்⋆ கண்ணபுரம் ஒன்-
றுடையானுக்கு⋆ அடியேன் ஒருவர்க்குரியேனோ (3)

மிக்கானை⋆ மறையாய் விரிந்த விளக்கை⋆ என்னுள்
புக்கானைப்⋆ புகழ் சேர் பொலிகின்ற பொன்மலையை⋆
தக்கானைக் கடிகைத்⋆ தடங்குன்றின்மிசை இருந்த⋆
அக்காரக் கனியை⋆ அடைந்துய்ந்து போனேனே (4)

வந்தாய் என் மனத்தே⋆ வந்து நீ புகுந்த பின்னை⋆
எந்தாய்! போய் அறியாய்⋆ இதுவே அமையாதோ⋆
கொந்தார் பைம் பொழில் சூழ்⋆ குடந்தைக் கிடந்துகந்த
மைந்தா⋆ உன்னை என்றும்⋆ மறவாமைப் பெற்றேனே (5)

எஞ்சா வெந்நரகத்து⋆ அழுந்தி நடுங்குகின்றேற்கு⋆
அஞ்சேல் என்றடியேனை⋆ ஆட்கொள்ள வல்லானை⋆
நெஞ்சே! நீ நினையாது⋆ இறைப்பொழுதும் இருத்தி கண்டாய்⋆
மஞ்சார் மாளிகை சூழ்⋆ வயலாலி மைந்தனையே (6)

பெற்றார் பெற்றொழிந்தார்⋆ பின்னும் நின்றடியேனுக்கு⋆
உற்றானாய் வளர்த்து⋆ என்னுயிர் ஆகி நின்றானை⋆
முற்றா மாமதி கோள் விடுத்தானை⋆ எம்மானை⋆
எத்தால் யான் மறக்கேன்⋆ இது சொல்லென் ஏழை நெஞ்சே! (7)

கற்றார் பற்றறுக்கும்⋆ பிறவிப் பெருங்கடலே⋆
பற்றா வந்தடியேன்⋆ பிறந்தேன் பிறந்த பின்னை⋆
வற்றா நீர் வயல் சூழ்⋆ வயல் ஆலி அம்மானைப்
பெற்றேன்⋆ பெற்றதுவும்⋆ பிறவாமை பெற்றேனே (8)

கண்ணார் கண்ணபுரம்⋆ கடிகை கடி கமழும்⋆
தண்ணார் தாமரை சூழ்⋆ தலைச்சங்க மேல்திசையுள்⋆
விண்ணோர் நாண்மதியை⋆ விரிகின்ற வெஞ்சுடரை⋆
கண்ணாரக் கண்டு கொண்டு⋆ களிக்கின்றதிங்கென்றுகொலோ (9)

‡செரு நீர வேல் வலவன்⋆ கலிகன்றி மங்கையர் கோன்⋆
கரு நீர் முகில் வண்ணன்⋆ கண்ண புரத்தானை⋆
இரு நீரின் தமிழ்⋆ இன்னிசை மாலைகள் கொண்டு தொண்டீர்⋆
வரு நீர் வையமுய்ய⋆ இவை பாடி ஆடுமினே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥